முருகப்பெருமான் துணை

**மகான் தானந்தர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.02.2024**, புதன்கிழமை

1. ஞானகுருவே அரங்கா வாழ்க
ஞானிகளை உருவாக்க வந்த
ஞானதேசிகா வாழ்க வாழ்க
ஞாலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே துல்லிய ஆசிதனை
குறைவிலா சோபகிருது சால் திங்கள்
தெரிவிக்க மூவையோர் திகதி புந்திவாரம்
(சோபகிருது வருடம் மாசி மாதம் 16 ம் நாள், 28.02.2024, புதன்கிழமை)
தேசிகனும் கேட்க தானந்தர் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மைபட தரும வழி காட்டும்
தானவான் அரங்கன் நெறி
தயவு நெறியாக இருக்கவே
4. இருக்கவே கலியுக மக்கள்
ஏற்று ஞானவழி வருக
வருத்தங்கள் அனைத்தும் விலகி
வந்தடையும் உயர்வு நலன்கள்
5. நலமுற ஆரோக்கிய பலமும்
நாட்டிட மேலவர் தொடர்புடன்
வளமுற பொருள் பலமும்
வள்ளல் தன்மையும் பெருகி
6. பெருகியே அரங்கன் தருமத்தில்
பெருமளவில் உதவி செய்து
முருகப்பெருமான் மேலான
முழுமைதரும் வழிபாட்டை செய்து
7. செய்துமே அரங்கமகானின்
சீடர்களாக உலகோர் அடையாளம்
அய்யமற கொண்டு வருக
அனைவருக்கும் சித்திகள் கூடி

8. கூடியே அரங்கன் உருவாக்கிய
குறைவிலா சத்யஜோதி அமைப்பு வழி
நாடியே ஆன்மீக அரசியல் களம்
நானிலத்தில் அரங்கன் சீடர்கள்

9. சீடர்கள் கண்டு நல்ல தலைமை
சித்திமிகு ஞானிகள் ஆசிபெற்ற
இடரில்லா மேலவர்கள் சேர
இயம்பிடுவேன் ஞான சபை அமைத்து

10. அமைத்து அரங்கன் விரும்பும்
ஆளுமை ஞான வழி கண்டு
நேமமுடன் ஞானயுகமாற்றம்
நிலவுலகம் காணக் கூடும்

11. கூடவே ஞானிகள் வெளிப்பட
குருபரன் தலைமை கண்டிட
நாடெங்கும் ஞானிகள் ஆட்சி
ஞான ஆட்சியாக மலரும்

துல்லிய ஆசி முற்றே

—சுபம்—